# ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டங்கள்!

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| மதுரை வடக்கு | மேலூர் | மாண்புமிகு பி.மூர்த்தி<br>வெங்கடேசன் எம்.எல்.ஏ.,<br>சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| மதுரை மாநகர் | மதுரை தெற்கு | மாண்புமிகு முனைவர்<br>பழனிவேல் தியாகராஜன்<br>கோ.தளபதி, எம்.எல்.ஏ.,<br>அன்னவயல் கணேசன் |
| மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் | சேடப்பட்டி மு.மணிமாறன்<br>நெல்லிக்குப்பம் புகழேந்தி<br>கவிஞர் சிவமுத்துவளவன் |
| தேனி வடக்கு | பெரியகுளம் | தங்க தமிழ்செல்வன், எம்.பி.,<br>கே.எஸ்.சரவணகுமார், எம்.எல்.ஏ.,<br>ஆலங்குடி செல்வராஜ் |
| தேனி தெற்கு | ஆண்டிப்பட்டி | கம்பம் ராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,<br>மகாராஜன், எம்.எல்.ஏ,<br>தக்கோலம் தேவபாலன்<br>எழும்பூர் கோபி |
| விருதுநகர் வடக்கு | விருதுநகர் | பேராசிரியர் சுப.வீரபாண்டியன்<br>ஏஆர்ஆர். சீனிவாசன், எம்.எல்.ஏ.,<br>குடந்தை ரமேஷ் |
| விருதுநகர் தெற்கு | சாத்தூர் | மாண்புமிகு<br>கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்<br>சௌ.தங்கபாண்டியன், எம்.எல்.ஏ.,<br>நெல்லை மணி<br>ஆரூர் மணிவண்ணன் |
| இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | மாண்புமிகு<br>ராஜகண்ணப்பன்,<br>காதர்பாட்சாமுத்துராமலிங்கம்,<br>எம்.எல்.ஏ<br>கவிஞர்<br>ஆண்டாள் பிரியதர்சினி |
| தூத்துக்குடி வடக்கு | கோவில்பட்டி | மாண்புமிகு கீதாஜீவன்<br>மார்கண்டேயன், எம்.எல்.ஏ.,<br>கந்திலிகரிகாலன்<br>டாக்டர் கலைகதிரவன் |
| தூத்துக்குடி தெற்கு | திருவைகுண்டம் | மாண்புமிகு அனிதா<br>ஆர்.இராதாகிருஷ்ணன்<br>சண்முகையா எம்.எல்.ஏ.<br>கடலூர் இள.புகழேந்தி |
| திருநெல்வேலி கிழக்கு | அம்பாசமுத்திரம் | இரா. ஆவுடையப்பன்<br>ஆலங்குளம் மரியராஜ்<br>எஸ்.கே.ஶ்ரீராம்<br>சேலம் கோவிந்தன் |
| திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி | அப்துல் வகாப், எம்.எல்.ஏ.,<br>திருமதி விஜிலா சத்யானந்த்,<br>ஆம்பூர் தருமன் |
| தென்காசி வடக்கு | சங்கரன்கோவில் | இ. ராஜா, எம்.எல்.ஏ.,<br>மதுரை பாலா<br>திருப்பூர் கூத்தரசன் |
| தென்காசி தெற்கு | ஆலங்குளம் | ஜெயபாலன்<br>ஈரோடு இளையகோபால்<br>குடியாத்தம் பாரி |
| கன்னியாகுமரி கிழக்கு | நாகர்கோவில் | ஆர்.மகேஷ்<br>நெல்லை ஏ.ரவி<br>சிவகாசி ஜீவா |
| கன்னியாகுமரி மேற்கு | விளவங்கோடு | மனோ. தங்கராஜ்<br>ஆயிரப்பேரி மா.முத்துவேல்<br>உடன்குடி தனபால் |
| கிருஷ்ணகிரி மேற்கு | தளி | ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ.,<br>கம்பம் செல்வேந்திரன்<br>வழக்கறிஞர்<br>வி.வைத்தியலிங்கம்<br>ஆவடி கா.மு.ஜான் |
| திருப்பத்தூர் | திருப்பத்தூர் | கா.தேவராஜ், எம்.எல்.ஏ.,<br>நல்லதம்பி, எம்.எல்.ஏ.,<br>ஆலந்தூர் ஒப்பிலாமணி,<br>கவிஞர் ஏ.ராஜசேகர் |
| தருமபுரி கிழக்கு | தருமபுரி | பி.தர்மசெல்வன்<br>வி.பி.ராஜன்<br>சபி சுலைமான் |
| தருமபுரி மேற்கு | பாலக்கோடு | முனைவர் பழனியப்பன்<br>சேலம் இரா.தமிழரசன்<br>குடியாத்தம் புவியரசி<br>குமரி பிரபாகரன் |

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 18.
நாள்: 07–03–2025.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### ‘சாகித்ய அகாடமி’ விருது பெற்ற

# பேராசிரியர் விமலாவுக்கு பாராட்டு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளத்தில் பதிவு!

**சென்னை, மார்ச் 11-**

**2024ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுக்கு தேர்வாகி இருக்கும் நெல்லை பேராசிரியயை திருமிகு ப.விமலாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



‘எனது ஆண்கள்’ நூலுக்காக 2024ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பு விருதுக்குத் தேர்வாகி இருக்கும் திருமிகு ப. விமலா அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

கல்விப்புலத்தில் இருந்து இலக்கிய மொழிபெயர்ப்புகளில் ஈடுபடும் தங்களின் பாராட்டத்தக்க பணி தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### சிம்பொனியை அரங்கேற்றிய முதல் இந்தியர்!

# இசைஞானி இளையராஜாவின் ‘சிம்பொனி’ லண்டனில் அரங்கேற்றம்!

*லண்டன், மார்ச் 11-*

இசைஞானி என அனைவராலும் அழைக்கப்படும் இளையராஜா, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட திரைப் படங்களுக்கு இசையமைத்துள்ளார்.



500க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியதோடு பாடியும் இருக்கிறார். இசைக்கு அவர் அளித்த பங்களிப்பை போற்றும் வகையில் பல்வேறு விருது களையும் இசைஞானி பெற்றுள்ளார்.

மேற்கத்திய இசையுடன் நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானிய இசையை ஒருங்கிணைத்து 1986, 1988 ஆகிய ஆண்டுகளில் how to name it மற்றும் nothing but wind எனப் பெயரிடப்பட்ட நீண்ட நேர இசைத் தொகுப்புகளை அவர் வெளியிட்டிருந்தார்.

2005 ஆம் ஆண்டில் திருவாசகத்தை மேற்கத்திய இசைக் கருவிகளின் இசையோடு வெளியிட்டதை அடுத்து அவர் தொடர்ந்து சிம்பொனியில் ஆர்வம் காட்டி வந்தார்.

இந்நிலையில், valiant என பெயரிட்டுள்ள தனது முதல் சிம்பொனியை இளைய ராஜா லண்டனில் அரங்கேற்றம் செய்தார். இந்த சிம்பொனியை உலகின் சிறந்த இசைக் குழுவான ராயல் பிலார் மோனிக் குழுவினர் இசைத்தனர். புகழ் பெற்ற ஈவன்டின் அப்பல்லோ அரங்கத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தியாவிலிருந்து முதல் முறையாக சிம்பொனியை அரங்கேற்றியதன் மூலம், மொஸார்ட், பீத்தோவன் போன்ற இசை மேதைகளின் வரிசையில் இளைய ராஜா இணைந்துள்ளார்.

கடந்த வாரம் இளையராஜாவின் வீட்டிற்கே சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அவரது சிம்பொனி இசை அரங்கேற்றத்திற்கு வாழ்த்துகளை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஈரோடு வடக்கு மாவட்ட

# சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.கே.செல்வன் இல்ல மண விழா வரவேற்பு!

### இன்று நடைபெறுகிறது! அமைச்சர்கள் வாழ்த்து!

*ஈரோடு, மார்ச் 11 -*

ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.கே.செல்வன் இல்ல திருமண விழா அமைச்சர்கள் துரைமுருகன், டி.ஆர். பாலு, கே.என்.நேரு, அந்தியூர் ப.செல்வராசு, ஆ. ராசா, ஏ.வ.வேலு, சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், அர.சக்ரபாணி, வி.செந்தில் பாலாஜி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பி.மூர்த்தி, கயல்விழி செல்வராஜ், ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், ஏ.ஜி.வெங்கடாசலம், கே.இ.பிரகாஷ், கார்த்திகேய சிவசேனாதிபதி, ஏ.எம்.விக்கிரமராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.கே.செல்வன் - எஸ்.சாரதா ஆகியோரின் மகள் எஸ்.பிரதிக்க்ஷா, ஆர். பழனிச்சாமி பி.புஷ்பா ஆகியோரின் மகன் நிதுன் நிதர்ஷ் ஆகியோரின் திருமண வரவேற்பு இன்று (11.3.2025 - செவ்வாய் கிழமை) மாலை 6 மணி முதல் 9 மணி வரை தொடர்ந்து நாளை (12.3.2025 - புதன்கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் குன்னத்தூர் பெருமாநல்லூர் ரோடு ரீ சங்கர் மஹாலில் திருமணம் நடைபெற உள்ளது.

திருமண விழாவில் அமைச்சர்கள் துரைமுருகன், டி.ஆர்.பாலு, கே.என். நேரு, அந்தியூர் ப.செல்வராசு, ஆ.ராசா, ஏ.வ.வேலு, சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், அர.சக்ரபாணி, வி.செந்தில்பாலாஜி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பி.மூர்த்தி, கயல்விழி செல்வராஜ், ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம், அயலக தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா உள்ளிட்ட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, வார்டு கழக நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.




கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72–வது பிறந்தநாளை முன்னிட்டு உதகை நகர தி.மு.க. சார்பில் உதகை நகரச் செயலாளர் எஸ். ஜார்ஜ் ஏற்பாட்டில் நஞ்சநாடு ஆதரவற்றோர் இல்ல முதியவர்கள் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். முன்னதாக வாகனத்தை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு கொடியசைத்து வழி அனுப்பி வைத்தார்.



பேராசிரியர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வைக்கப்பட்ட பேராசிரியர் திருஉருவப் படத்திற்கு நாகை மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் நாகை நகரச் செயலாளர் இரா.மாரிமுத்து, நாகூர் நகரச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், உதயம் வே.முருகையன், பி. என். கார்த்தி, சுரேஷ், தமயந்தி, இரா.தங்கதுரை, நிஜாம் சேட், அபுபக்கர், பி.திலகர், வெற்றிலை கடை சிவா ஆகியோர் உள்ளனர்.

# கும்முடிப்பூண்டி - பெரியபுலியூரில் புதிய நியாய விலைக் கடை!

### டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

*திருவள்ளூர், மார்ச் 11 -*


திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், பெரியபுலியூர் ஊராட்சி, கீமள்ளுர் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான புதிய பகுதிநேர நியாய விலைக்கடையை முன்னாள் மாவட்டச் செயலாளரும், கும்முடிப் பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மு.மணி பாலன், எஸ்.ரமேஷ், மு.பாஸ்கர், பா.முத்துசாமி, பாசம்அன்பு, டி. மஸ்தான், டி.முனிவேல், உதயகாந்தம்மாள், யேசுரத்தினம், கோபால், சந்திரமோகன், இளங்கோ, லாரன்ஸ், முத்து, ரவி, பொன்னுசாமி, தனபால், கே.வி.நாகராஜ், விஜய் வின்சென்ட், எம்.அருள், முகிலன், மஸ்தான், பழனி, கிளை நிர்வாகிகள் அரிபாபு, முரளி, பானுசந்தர், ஏழுமலை, சிவகுமார், சீனிவாசன், துரைசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தியாகி தாளமுத்து (நடராஜன்)

### மார்ச் 11 (1939)



**குடந்தையிலிருந்து குமுறும் உணர்ச்சியோடு சென்னை வந்து 13.9.1938 காலை இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளி முன்பு கட்டாய இந்தி ஒழிக! ஆரிய இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!”என முழக்கமிட்டு மறியலில் கலந்து கொண்டு கைதானார்.**

**ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட் நீதிபதி “இப்படியே விட்டுவிட்டால் ஊருக்கு போய்விடுகிறீர்களா ?” என்று கேட்டு மூச்சு இழுப்பதற்குள் விடை வந்தது தாளமுத்துவின் திருவாயிலிருந்து “இல்லை, முடியாது” என்பதாக. “நாலு மாத கடின காவல் தண்டனை விதிக்கிறேன்” என தீர்ப்பளித்தார் நீதிபதி.**

**சிறையில் கடுமையான வயிற்று போக்கு காரணமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.**

**சிறைச்சாலையில் இறந்துபோன தாளமுத்துவும், நடராஜனும்தான் இந்தி எதிர்ப்பு போரின் முதல் களப்பலிகள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**